புலத்சிங்கள பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புலத்சிங்கள பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் புலத்சிங்கள பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் ணங்காமை

உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.32 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் கணிப்பிடும் போது முதலீட்டு வருமானமாக ரூபா 154,314 குறைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 599,667 குறைக்கப்பட்டிருந்ததுடன் மிகைக் கணிப்பிடும் போது கவனத்தில் கொள்ளப்படாது இருந்த மீண்டெழும் அல்லாத செலவினங்களுக்கான பெறுவனவுகள் ரூபா 88,432,487 சீராக்கப்பட்டமை கணக்காய்வின் ஏற்றுக் கொள்ள முடியாது இருந்தது.	2024 ஆம் ஆண்டில் கிடைத்த வட்டி அளவிற்காக மாத்திரம் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதுன் 2024 ஆம் ஆண்டின் போது வீதி மற்றும் கட்டடங்களுக்காக கிடைக்கப் பெற்ற மூலதன உதவி அளவு காண்பிக்கப்பட்டுள்ளது.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 26,465 ஆக இருந்த போதும் அது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை.	ஆண்டில் கிடைத்த வட்டி மாத்திரம் ஆண்டின் வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது.	கணக்குகள் சரியாகப் படல் வேண்டும்.
(ஆ)	ஊழியர் பிணை வைப்பு ரூபா 163,742 மற்றும் ஊழியர் பிணை முதலீடு ரூபா 163,742 மீளாய்வாண்டின்	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி	மேற்படி

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாது இருந்ததுடன் வெளிப்படுத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	

1.6.3 அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2008 ஆண்டுக்கு முன்னிருந்து கொண்டு வரப்படுகின்ற குறித்துரைத்த ரீதியல் இனங்காண முடியாதிருந்த எஞ்சியிருந்த கொடுக்கல் வாங்கல்களின் கூட்டுத் தொகையான ரூபா 116,297 தொங்கல் கணக்கின் மீதி எந்த ஒரு இனங்காணலும் இன்றி பதிவழிக்கப்பட்டிருந்தது.	இனங்காண முடியாத செலவு மீதியை பதிவளிப்பதற்காக அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.	தொங்கல் கணக்கின் மீதியைப் பதிவளிப்பதற்கு முன் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185(உ) பிரிவு	காணிக் கூறிட்டுப் பிரிப்பதற்காக அங்கீகாரம் வழங்குதல் சபையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரான தலைவரால் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 1992 ஆம் ஆண்டின் போது உப தலைவரால் சட்டத்தின் பிரிவுக்கு முரணாக குருகே ஆதன கம்பனியால் விற்பனைக்காக சமர்ப்பிக்கப்பட்ட நில வரைபட இலக்கம் 278 என்ற காணியை உப கூறிடல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உபகூறிடல் நில வரைபடம் அங்கீகரித்தல் நீதிமன்றத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.	பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	சபைக்குரிய 09 வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	ஓட்டத்தில் மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகின்ற வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை நாளது வரையாக மேற்கொள்ளப்பட வில்லை.	தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2022 சனவரி 22 ஆந் திகதிய இலக்கம்	சபைக்குச் சொந்தமான தெஹிகஹவெல சுடலைக் கூடம் மற்றும் பொலேகொட சுடலைக் கூடம்	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக மத்திய	தொடர்புடையவர்த்தமாணி அறிவித்தலின் பிரகாரம்

	2264/18 என்ற அிவிசேட வர்த்தமானி	என்பவற்றுக்காக வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.	சுற்றாடல் அதிகார சபைக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	1984 இன் 44 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 8(ஐ) 4(2) ஆம் பிரிவு	தரச் சான்றிதழ் பெறப்படாமல் கட்டிடம் ஒன்றை பயன்பாட்டுக்கு எடுத்தல் தண்டணை பெறக் கூடிய குற்றமாக இருந்த போதிலும் சட்டத்திற்கு முரணாக தரச் சான்றிதழ் பெறாமல் தெபுலந்த ஸ்பிரிங் குடிநீர் போத்தல் நிறுவனம் நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக சபை எந்த ஒரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.	விண்ணப்ப பத்திரத்தின் பிரகாரம் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட பயன்பாடு வணிக பயன்பாடாக காண்பிக்கப்பட்டமையால் கைத்தொழில்காக அங்கீகரிப்பதற்கான அனுமதி வழங்கப்பட வில்லை.	தொடர்புடைய சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,171,795 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,103,503 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				**2023**			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	6,985,493	6,060,070	5,555,199	2,017,831	4,502,502	3,399,060	3,905,678	1,658,843
ii.	வாடகை	6,304,000	3,341,515	4,756,697	153,714	5,431,000	2,702,889	5,021,657	129,404
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	5,785,500	864,539	1,018,839	-	1,005,500	572,843	888,338	37,500
iv.	ஏனைய வருமானம்	51,851,500	-	50,888,610	-	11,056,500	-	9,560,738	-
		70,926,493	10,266,124	62,219,345	2,171,545	21,995,502	6,674,792	19,376,411	1,825,747

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 1,825,747 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 757,136 அதாவது 41 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	**ஆதனவரி**		
(i)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை ரூபா 1,414,328 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 655,140 அதாவது 46 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(ii)	மீளாய்வாண்டின் ஆதனவரி சிட்டையிடல் ரூபா 4,489,075 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் ரூபா 1,285,807 அதாவது 29 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	ஆதனவரி தொடர்பான காலப் பகுப்பாய்வின் பிரகாரம் ஆதனவரி உரிமையாளர்கள் 1,403 பேர்களிடம் இருந்து 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான ஆதனவரி நிலுவை ரூபா 1,040,730 உம், 287 ஆதனவரி உரிமையாளரிடம் இருந்து 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான ஆதனவரி நிலுவை ரூபா 323,247 உம், 247 ஆதனவரி உரிமையாளரிடம் இருந்து 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான ஆதனவரி நிலுவை ரூபா 396,794 உம், 168 ஆதனவரி உரிமையாளரிடம் இருந்து 10 வருடங்களுக்கும் மேற்பட்ட ஆதனவரி நிலுவை ரூபா 180,175 உம் ஆகும்.	மேற்படி	மேற்படி
(இ)	**வாடகை**		
	சபைக்குரிய இரண்டு மாடிகளை உடைய கடை கட்டிடத்தின் மேல் மாடியில் 02 கடைகள் மற்றும் கீழ் மாடியில் ஒரு கடை பயன்படுத்தபடாமல் காணப்பட்டது.	இந்தக் கடைகளுக்காக கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு வழங்குதவற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விளைவற்றுக் காணப்படுகின்ற பயன்பாட்டுக்கு எடுத்தல் வேண்டும்.

(ஈ)	**நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** மாகாண சபையின் பிரத செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 10,700,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 27,500,000 ஆகும்.	2025 ஆம் ஆண்டின் போது முத்திரைக் கட்டண வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**சபையின் கருத்துரைகள்**	**பரிந்துரைகள்**
(அ)	2024 ஆம் ஆண்டில் நன்கொடையாக தேசிய உலர் உதவி சேவை நிலையத்தில் இருந்து கிடைக்கப் பெற்று தண்ணீர் பௌசரின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் கொண்டுவரப் பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் கணக்கீடு செய்யப்படும்.	சகல நிலையான சொத்துக்களும் பதிவேடுகளுக்கு கொண்டு வந்து நிதிக்கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும்.
(ஆ)	2021 நவம்பர் 16 ஆந் திகதி சபை மற்றும் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை (VTA) உடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் எங்களுடை பல் நோக்கு நிலையக் கட்டிடம் 30 வருட காலத்திற்காக கட்டணம் இன்றி தொழிற்பயிற்சி நிலையத்தை நடாத்திச் செல்வதற்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் 08 ஆம் நிபந்தனையின் பிரகாரம் தொழிற் பயிற்சி பாடநெறிக்காக பாடநெறிக் கட்டணம் அறவிடப்படுமாயின் மாத்திரம் தொழிற் பயிற்சி நிலையத்தின் தேறிய இலாபத்தில் 25 சதவீதம் சபைக்கு வழங்க வேண்டியிருந்த போதிலும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டில் பாடநெறிக் கட்டணமாக முறையே ரூபா 539,000 மற்றும் ரூபா 2,266,450 அறவிடப்பட்டிருந்த போதிலும் தேறிய இலாபத்தில் சபைக்கு அறவிட வேண்டிய 25 சதவீதத் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை.	2023, 2024 ஆம் ஆண்டுகளின் சபைக்கு அறவிட வேண்டிய கட்டணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.	உடன்படிக்கையின் பிரகாரம் தேறிய இலாபத்தில் 25 சதவீதம் அறவிடப்படல் வேண்டும்.
(இ)	2019 நவம்பர் 25 ஆம் திகதி புளத்சிங்கள பிரதேச செயலகத்தால் பிரதேச சபையின்	உரித்து பிரதேச சபை செயலாளருக்கு சொந்தமாக	உரித்தைக் கையேற்று ஆதனங்களின் பெறுமதி

	தலைவருக்கு ஏங்கள் ஓய பல்நோக்கு நிலையக் கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரித்து மாத்திரம் கையளிக்கப் பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அதன் உரித்து உறுதி வழங்கப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் உரிய கட்டத்தின் மற்றும் காணியின் பெறுமதி நிலையான சொத்துப் பதிவேட்டில் நிலையான சொத்தாக இனங்காண்பதற்கு சபைக்கு முடியாது இருந்தது.	இருந்தமையால் அதனை சபைக்குரிய காணியாகக் கணக்கீடு செய்வதற்கான இயலுமை காணப்படவில்லை.	நிதிக்கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும்.
(ஈ)	1992 ஆம் ஆண்டில் குருகே ஆதன வியாபாரக் கம்பனியால் கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் 278 என்ற காணிக்கூறிடலை அங்கீகரிக்கும் போது 03 றூட் 21.1 பேர்ச் அளவான 09 காணிக் கூறுகள் சபையில் விளையாட்டு மைதான அபிவிருத்திக்காக கோரப்பட்டிருந்ததுடன் இந்த காணிப் பகுதி சபையினால் கையேற்காமையின் காரணமாக 2012 ஆம் ஆண்டின் போது சபைக்கு எதிராக வழக்கு தொடர்ந்து அந்த வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 7,839,998 தொகை குருகே ஆதன வியாபாரக் கம்பனிக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்த போதிலும் இந்த நட்டம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் யார் எனத் தீர்மானித்து நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் பரிசோதனைகள் மேற்கொண்டு நிதிப்பிரமாணம் 156 இன் பிரகாரம் அறவிடப்பட்டிருக்க வில்லை.	நட்டத்திற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரைத் தீர்மானித்து நட்டம் அறவிடப்படல் வேண்டும்.
(உ)	உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 யூன் 26 ஆந் திகதிய இலக்கம் ஜீஎல்டீ/01/05/பீ22/2020 என்ற கடிதத்தின் மூலம் மேற்கூறப்பட்ட காணி உபகூறிடல் அங்கீகரிக்கும் போது முறையான நடைமுறைகளை பின்பற்றாத உத்தியோத்தர் தொடர்பாக தாபன விதிக் கோவையின் XLVII அத்தியாயத்தின் 13.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஆரம்ப விசாரணை மேற்கொண்டு ஒரு மாதத்திற்குள் அறிக்கை அனுப்புவதற்கு மூன்று	விசாரணை நடவடிக்கைகள் உள்ளூராட்சித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றது.	விசாரணை அறிக்கை விரைவாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நபர்களைக் கொண்ட குழு விசாரணைக்காக நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 வரையும் விசாரணைகள் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.		

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93 ஆம் பிரிவின் பிரகாரம் சகல மலசல கூடங்கள் மற்றும் மலசலகூடக் குழிகள் உரிய கால எல்லையின் போது முறையானதாக சுத்திகரித்தல் மற்றும் வெறுமையாக்குவதற்காக தேவையான சகல நடவடிக்கைகளும் எடுத்தல் பிரதேச சபையின் பணியாக இருந்த போதிலும் பிரதேச சபையில் மலக் கழிவுகள் அகற்றுவதற்காக 03 வருட காலம் முதல் கலி பௌசர் சேவை நடாத்தப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது கழிவுகள் சேகரிக்கும் தாங்கி ஒன்று தயாரிப்பதன் மூலம் இந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	மலக் கழிவுகளை அகற்றுவதற்காக கலி வண்டிச் சேவை நடாத்திச் செல்லப்படல் வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
03 டெக்டர் வண்டிகள் ஓட்ட நிலையில் காணப்படாது இருந்ததுடன் அந்த 03 டெக்டர் வண்டிகளையும் பழுது பார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	மதிப்பீட்டுக் குழுவினால் வழங்கப்படுகின்ற பரிந்துரையை கவனத்தில் கொண்டு ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ அல்லது பழுது பார்ப்பதற்கோ நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	மதிப்பீட்டுக் குழு பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2016 பெப்ரவரி 19 ஆந் திகதிய இலக்கம் 01/2016 என்ற மேல் மாகாண உள்ளூராட்சி செயலாளரின் நிர்வாக சுற்றறிக்கையின் 1.1.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் பொறுப்பில் உள்ள சகல வாகனங்களும் நிறுவத்தின் பெயரில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 03 வாகனங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	அமைச்சு விடயப் பொறுப்பு உத்தியோகத்தரால் சபைக்கு கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	சகல வாகனங்களும் நிறுவனத்தின் பெயரில் கையேற்கப்படல் வேண்டும்.

(ஆ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 127 ஆம் பிரிவு மற்றும் 1946 இன் 57 ஆம் இலக்க பொது மயான நிலங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய அதிகாரத் தரப்பினரான பிரதேச சபையினால் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற மயாண நிலங்களை சபைக்கு கையேற்க வேண்டியிருந்த போதிலும் 33 மயான நிலங்கள் சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை.	மயான நிலங்களை கையேற்கும் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற மயான நிலங்களை பிரதேச சபைக்கு கையேற்றல் வேண்டும்.
(இ)	2023 ஆம் ஆண்டில் ரூபா 2,496,276 கூட்டுமொத்தமான செலவில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேச சபை விளையாட்டு அரங்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.	மாவட்ட காணி மறுசீரமைப்பு அதிகார சபைக்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	விளையாட்ரங்கு சபைக்கு கையேற்றல் வேண்டும்.
(ஈ)	ஏகள் ஓய பல்நோக்கு நிலையக் கட்டிடத்தில் காணப்பட்ட கேட்போர் கூடத்தில் ஒரு தடவையில் 450 இற்கும் 500 இற்கும் இடையிலான நபர்களின் அளவு இருக்கக் கூடியதாக இருந்ததுடன் அந்த கேட்போர் கூடம் 2019 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்படுகின்றது.	கேட்போர் கூடத்திற்கு தேவையான வளிப் பதனாக்கி மற்றும் ஆசன வசதிகள் வழங்கப்படாமையினால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாது இருந்தது.	தேவையான வசதிகளை பூர்த்தி செய்து கேட்போர் கூடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2001 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 220,840 கடன் மீதி ஒன்று மிளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	நிலுவை ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 20 விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை திருத்தப்பட்டு செயல் முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக திருத்தப்பட்ட மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் அவ்வாறு இல்லாமல் கவனத்தில் கொள்ளப்படும் எனக் குறிப்பிடுகின்றோம்.	திருத்தப்பட்ட மதிப்பீட்டை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் இறுதியில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயல் முன்னேற்றத்தை பரீட்சித்த போது மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 7,904,000 ஆன 14 செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம் 0 சதவீதமாக இருந்தது.	சபையின் ஊழியர்கள் ஈடுபடுத்தி சில பணிகளை நிறைவேற்றுதல், தேர்தல் கால எல்லை இரண்டும் ஏற்பட்டதன் அடிப்படையில் இந்தப் பணிகளை நிறைவேற்றுதவற்கு முடியாதிருந்தமை போன்ற காரணங்கள் இதற்காக தாக்கமளித்திருந்தது.	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.
(இ)	மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 3,375,000 கூட்டுத் தொகையான 13 செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம் 20 சதவீதத்தை விட குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தது.	குறைந்த தொகை ஒன்று செலவிட்டமை, வாசகர்களினால் உதவிகள் வழங்கியமை மற்றும் பழுது பார்த்தல் தேவை ஏற்படாது இருந்தமையால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	பொருத்தமான பாதீட்டு மதிப்பீடு தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பிரதேச சபையின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் 24 செயற்பாடுகளின் கீழ் கணக்காய்வு நோக்கங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுகைகள், வரிக் கட்டணம் அறவிடல், திட்டத்தை அங்கீகரித்தல், அபிவிருத்தி செயற்திட்டம், பிரஜைகள் விஞ்ஞாபனம், சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்குதல் தொடர்பாக போதியளவான கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை.	2024 ஆம் ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் விநியோகிக்கப்பட்டுள்ளது.	உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் போதியளவான கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	30 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக கூட்டு மொத்தமாக ரூபா 9,857,000 ஆன மதிப்பீடு செய்யப்பட்ட தொகை எந்த ஒரு தொகையும் நடப்பாண்டின் போது செலவிடப்பட்டிருக்கவில்லை.	நிதியேற்பாடுகள் சேமிப்பதற்காக காரணங்கள் காண்பிக்கப்பட்டுள்ளது.	பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	54 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 18,066,225 ஆன மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் ரூபா 5,887,776 மாத்திரம் செலவிடப் பட்டிருந்தமையால் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் 50 சதவீதத்திற்கு சமமான அளவு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி